**ஒபெக் நிதியளிக்கப்பட்ட வீதி வலையமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டத் - 2019**

ஒபெக் நிதியளிக்கப்பட்ட வீதி வலையமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டத் இன் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. இலங்கையின் அபிவிருத்திக் கொள்கை மாதிரி வேலையின் ஒன்றிணைந்த பகுதியாக உண்டாக்குதல் மற்றும் மேல், வடமேல், மத்திய, தென் மற்றும் சபரகமுவ மாகாணங்களில் தேசிய நெடுஞ்சாலைகளின் 202 கிலோமீற்றரை தரமுயர்த்துதல் அதேபோல் பாலங்களின் மீள்நிர்மானம் மற்றும் அகலமாக்கல் மூலம் போக்குவரத்து துறையில் துரிதமாக அதிகரிக்கின்ற தேவையை எதிர்கொள்வதற்கு வீதி வலையமைப்பு இணைப்பை முன்னேற்றுவதை இலக்காக கொள்ளல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 7,121.32 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 62.46 மில்லியனானதுடன் அதில் ரூபா 4,560 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 40 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மீதித் தொகை ரூபா 2,561.32 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 22.46 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 சனவரி 16 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதி அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2019 திசெம்பர் 31 வரை 02 முறை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 126 காணித்துண்டுகளிற்கான இழப்பீடுகளை கொடுத்து தீர்ப்பதன் தாமதத்தின் மீதான ரூபா 18 மில்லியன் வட்டி கொடுப்பனவுகளிற்கான ஏற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்தக்கள் பொறுப்பக்களின் குறை மதிப்பீடு. | செலுத்தப்பட்ட இழப்பீடுகளிற்கான வட்டியினை 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றில் அட்டுறு செய்ய கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | ஏற்பாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இன் பிரகாரம் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்கள் மற்றும் பொதுதிறைசேரியினால் பராமரிக்கப்பட்ட ஆவணங்கள் என்பவற்றின் பிரகாரம், கடன் வழங்களிலிருந்தான மொத்த செலவீடுகள் ரூபா 67 மில்லியனாகவிருந்தது. இருப்பினும், வெளிவளங்கள் திணைக்களத்தின் பதிவுகளின் பிரகாரம், அது ரூபா 105 மில்லியனாகவிருந்தது. இவ்வத்தியாசத்திற்கான காரணங்கள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக, செயற்திட்டமானது கூட்டுமொத்தம் ரூபா 13 | சொத்துக்கள் பொறுப்பக்களின் குறை மதிப்பீடு. | வழங்கப்பட்டிருக்கவில்லை. | கடனின் மிகுதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் கடனிலிருந்தான அனைத்து பெறுவனவு பதிவுகள் என்பனவற்றை இணக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

மில்லியனை 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் கடனின் கீழ் பதிவுசெய்வதற்கு பதிலாக பொறுப்புக்களின் கீழ் ஓர் மீளளிக்கத்தக்க வெளிநாட்டு உதவியாக பதிவு செய்திருந்தது.

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

| கணக்காய்வாளரின் கருத்து மற்றும் அவதானிப்புக்கள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2019 திசெம்பர் மாதத்திற்கான மாதாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், வீதி மாறல் பிரிவின் உண்மையான பௌதீக செயலாற்றல் மற்றும் வடிவமைப்பு செயலாற்றல் என்பன தொடர்ந்தும் 56.61 சதவீதம் மற்றும் 65 சதவீதமாக மாத்திரமே இருந்தது. | நிர்மான வேலைகளை பூர்த்தியாக்குவதில் தாமதம் காரணமாக, செலவுகள் அதிகரிப்பதற்கான சாத்தியம். | உடன்பட்டனர். மூலப்பொருட்களை வழங்குவதில் குறைபாடு காரணமாக ஒப்பந்ததாரர் இலக்கிடப்பட்ட செயலாற்றலை அடைந்திருக்கவில்லை. | புனரமைப்பு வேலைகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ரக்வன தொடக்கம் மாதம்பை வரையான ஏ017 – காலி – தெனியாய – மாதம்பை வீதி பிரிவின் புனரமைப்பின் பூர்த்தியாக்கல் திகதியிலிருந்து நான்கு வருடங்கள் மூன்று மாதங்கள் அது கடந்திருந்தும் கூட 1,468 இல் 126 காணி துண்டுகள் மாத்திரமே 2019 திசெம்பர் 31 வரை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. | காணிகளை துஸ்பிரயோகம் செய்யக்கூடிய சாத்தியம். | காணிகள் எல்ஏஆர்கியுவ் (LARQ) விற்கு செலுத்த வேண்டிய வட்டி கொடுப்பனவுகளை கொடுத்து தீர்த்ததன் பின்னரே பதிவு செய்யப்பட வேண்டியதுடன் உரிய பிரதேச செயலகங்கள் மீது அதே காணிகள் மீது ஓர் தாமதமும் காணப்பட்டது மேலும் வேலைகளை துரிதப்படுத்துவதற்கு ஞாபகமூட்டல்கள் அவர்களிற்கு ஏற்கனவே அனுப்பப்பட்டிருக்கின்றது. | காணி சுவீகரிப்பு செயன்முறையை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பேராதனிய – பதுளை செங்கலடி வீதி பிரிவு 2017 ஜுன் 09 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 ஜுன் 08 இல் பூர்த்திசெய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்றிட்ட | தாமதம் காரணமாக மேலதிக கிரயங்கள் ஏற்படக்கூடிய சாத்தியம். | காணி சுவீகரிப்பின் தாமதத்தின் காரணமாக 0+920 கி.மீ - 2+630 கி.மீ வரையான தளத்தின் உரிமையில் தாமதம் காரணமாகவே அவ் 77 | புனரமைப்பு வேலைகளை விரைவுபடுத்தி குறைந்த தாமதத்துடன் பூர்த்தி செய்ய |

| | | | | |
|---|---|---|---|---|
| | காலப்பகுதி 77 நாட்களினால் நீடிக்கப்பட்டிருந்தது. இந்நீடிப்பின் பெறுபேறாக, ரூபா 2.3 மில்லியன் அடிப்படை மற்றும் பொது உருப்படிகள் மீதும் ரூபா 2.6 மில்லியன் ஆலோசனை கண்காணிப்பு செலவுகள் மீதும் மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது. | | நாட்கள் கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் பிரிவு 8.7 இன் பிரகாரம், தாமத இழப்பீடுகள் ரூபா 40.8 மில்லியன் ஒப்பந்ததாரரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்ததாரரிற்கு தேவையற்ற நன்மைகள். | தாமத இழப்பீட்டினை கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 27 மில்லியன் 2019.05.31 வரை அறவிடப்பட்டுள்ளது. இருப்பினும், ஒப்பந்ததாரர் எல்டி (LD) பெறுவனவை தாமதிக்க வேண்டியதுடன் ஏற்கனவே எல்டி இன் கீழ் மீளப்பெறப்பட்ட தொகையை விடுவிக்கவும் வேண்டியிருந்தார். | நேர இலக்குகளை அடையவும் கிரய அதிகரிப்பினை குறைத்து ஒப்பந்தங்களின் கால நீடிப்பினை தவிர்க்கவும் ஒப்பந்ததாரர்களின் செல்வாக்குச் செலுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | குழிகள் இல்லாமல் வீதியினை பராமரிப்பதற்கான அளவைகள் பட்டியலின் பெறுமதி ரூபா 465,000 ஆகவிருந்ததுடன் ரூபா 1.6 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் மந்தகதியான செயலாற்றல் மீதான பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் காரணமாக, கடுகன்னாவ நிறைவேற்று பொறியியலாளரின் அலுவலகம் மற்றுமொறு ரூபா 9.5 மில்லியனை செலுத்த மதிப்பிட்டிருந்ததுடன் 7.7 மில்லியன் செலுத்தப்பட்டுமிருந்தது. அக்கொடுப்பனவு உடன்படிக்கையின் கீழான ஏற்கனவே உள்ள வீதியின் பராமரிப்பு தொகையில் 485 சதவீதமாகவிருந்ததுடன் எவ்வித முன் அனுமதியும் பராமரிப்பிற்கு பெறப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம். | இப்பராமரிப்பு வேலைக்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளரிடமிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளதுடன் கிரயம் ஒப்பந்ததாரரிடமிருந்து திரும்பப்பெறப்படும். | ஏற்கனவே உள்ள வீதியின் பராமரிப்பினை உண்ணிப்பாக கண்காணிக்கப்பட வேண்டும். |
| (உ) | குறிப்பிட்ட விபரணக்குறிப்பின் உபபிரிவு 119.1 இன் பிரகாரம், காப்புறுதி கொள்கைகள் பராமரிக்க வேண்டியதுடன் ஒப்பந்த செயலாற்றல் காலப்பகுதியில் அது நடைமுறையில் இருக்கும். | வேலை தொழிலாளர்கள் மற்றும் மூன்றாம் நபர்களிற்கு காப்புறுதி பெட்டகை ஒன்றை வைத்திறாமல் | உடன்பட்டனர். அனைத்து காப்புறுதிகளினையும் புதுப்பிக்க பல தடைவ ஒப்பந்ததாரரிற்கு ஞாபகமூட்டப்பட்டிருந்ததுடன் அனைத்து காப்புறுதிகளும் 2020 | அனைத்து காப்புறுதிகளிற்குமான புதுப்பித்தல்கள் நேரத்திற்கு பெறப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | இருப்பினும், ஒப்பந்ததாரர் 3 காப்புறுதி கொள்கைகளினை நீடித்திருக்காததுடன் அடையப்பெற்ற பௌதீக செயலாற்றல் கூட 2019 திசெம்பர் 31 மற்றும் 2020 மே 31 இல் உள்ளவாறு முறையே 56.61 சதவீதம் மற்றும் 67.56 சதவீதமாக மாத்திரமே இருந்தது. | நிர்மானங்களை செய்வதற்கான சாத்தியம். | நவம்பர் முடிவு வரை நீடிக்கப்பட்டிருந்தது. | |
| (ஊ) | தொழில் வழங்குனர் ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 8.7 மற்றும் ஆலோசகர் அறிவுறுத்தல் என்பனவற்றை கருத்தில் கொள்ளாது ஒப்பந்ததாரரிடமிருந்து ரூபா 27 மில்லியன் தொகையான தாமத கட்டணங்களை விதித்திருக்கவில்லை. செயற்திட்டமானது அவ்வாறான மேலதிக நிதி வசதிகளினை ஒப்பந்ததாரரிற்கு வழங்கியிருந்தும், பௌதீக செயலாற்றலானது 2018 ஓகஸ்ட் தொடக்கம் 2020 மே வரை 40.19 சதவீதத்தினால் மாத்திரமே அதிகரித்திருந்தது. | ஒப்பந்ததாரரினால் மேலதிக நிதிவசதிகளினை வைத்திருப்பதற்கான சாத்தியம். | உடன்பட்டனர். | நிர்மான ஒப்பந்தங்களின் நிபந்தனைகளை கடைபிடிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (எ) | அது நிதிசெயலாற்றலில் 49.53 சதவீதத்தினை அடைந்திருந்தாலும் கூட, செயற்திட்டமானது ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 14.2 இன் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலை ஆரம்பிப்பு முற்பணத்தினை மீளப்பெற்றக்கொள்ள ஆரம்பித்திருக்ககூடவில்லை. | ஒப்பந்ததாரரிற்கு தேவையற்ற நிதி நன்மைகள். | செயற்திட்டமானது குறித்தளவு செயலாற்றலினை அடையும் வரை முற்பணகொடுப்பனவுகளின் மீளப்பெறலை தாமதப்படுத்துமாறு ஒப்பந்ததாரர் வேண்டியிருந்தார். இருப்பினும் அதனை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. | உரிய நேரத்தில் வேலை ஆரம்பிப்பு முற்பணத்தினை மீளப் பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | ஒப்பந்த வீசேட நிபந்தனையின் உபபிரிவு 14.3 மற்றும் 14.6 இன் பிரகாரம், ஒப்பந்ததாரரரினால் சமர்ப்பிக்கப்படவேண்டிய இடைக்கால கொடுப்பனவு பட்டியல்களின் குறைந்தபட்ச மாதாந்த பெறுமதி ஒப்பந்த தொகையில் 3 சதவீதமாக இருந்தது. இருப்பினும், 2019 திசெம்பர் மாதத்திற்கான ஐபீசி யினை தவிர ஏனைய அனைத்து ஐபீசிகளும் தேவையான தேவைப்பாட்டிற்கு கீழாகவே சமரிப்பிக்கப்பட்டிருந்தது. | இடைக்கால கொடுப்பனவின் மதிப்பீட்டின் மீதான கிரயத்தின் வரம்பு மீறல். | உடன்பட்டனர். | கிரயம், நேரம் மற்றும் ஒப்பந்ததாரரிற்கான தேவையற்ற நன்மைகள் போன்றவற்றை குறைக்க ஒப்பந்த நிபந்தனையில் கூறப்பட்ட தேவைப்பாடுகளை கடைப்பிடிக்க வேண்டுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஐ) | உரிய ஒப்பந்ததாரரின் கிரயத்தில் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் கீழாக செய்யப்பட்ட ஏற்பாட்டிற்கு முரனாக செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை வழங்குவதற்கான கிரயத்தினை மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரரினை அனுமதிப்பதனூடாக வீதி புனரமைப்பு வேலைகள் மீதான அளவைப்பட்டியலின் வேறான கொடுப்பனவு உருப்படிகள் செய்யப்பட்டிருந்தது. அதன்படி கூட்டுமொத்தம் ரூபா 1 மில்லியன் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தின் கிரயத்தினை மீளப்பெற்றுக்கொள்ள பேராதெனிய – பதுளைசெங்கலடி வீதி ஒப்பந்ததாரரிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரரிற்கு தேவையற்ற நன்மைகள். | ஒப்பந்த நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் பிரகாரம், ஒப்பந்ததாரர் அவரது சொந்த செலவில் செயலாற்றல் பாதகாப்பினை வழங்க வேண்டும் இருப்பினும் வழமையாக பீஓகியுவ் உருப்படிகள் அதற்காக வழங்கப்படுவதுடன் இல்லாவிடில், ஒப்பந்ததாரர் இச்செலவினை ஏனைய பீஓகியுவ் உருப்படிகளில் உள்ளடக்க அல்லது விநியோகிக்க வேண்டும். | மேலதிக கொடுப்பனவுகளை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஒ) | புகையிரதங்கள் திணைக்களத்தின் பிரகாரம், சீஎச் 0+580 இல் கடந்து செல்லும் தண்டவாளத்தினை நகர்த்துவதற்கான மதிப்பிடப்பட்ட கிரயம் 9.2 மில்லியனாக இருந்ததுடன் அவர்களது சேவையை மிகவிரைவாக பெற்றுக் கொள்ள கொடுப்பனவினை செய்யுமாறு ஆலோசகர் 2018 மார்ச் 14 இல் ஒப்பந்ததாரரிற்கு அறிவுறுத்தியிருந்தார் அதன்பின்னர் 2 வருடங்கள் 4 மாதங்களை கடந்திருந்தும் கூட 2019 திசெம்பர் 31 வரை கூட கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. இந்நிலைமை செயற்திட்டத்தின் செயலாற்றலில் பாரதூரமாக தாக்கம் செலுத்தியிருந்தும் கூட செயற்திட்டத்தின் செயற்பாடுகளை விரைவுபடுத்த எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மான செயலாற்றல் தாமதமடைவதற்கும் செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிப்பதற்கும் சாத்தியம். | உடன்பட்டனர். | போதுப் பயன்பாடுகளை நகர்த்தும் செயன்முறையை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |